**விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)(பொ) செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர் : திருமதி.த.அனிதா, எம்.ஏ, பி.எட், எம்.பில்.,**

ந.க. அ6/10583/2021 நாள் :16-09-2023

பொருள்:- பொதுப்பணிகள் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - அருப்புக்கோட்டை வட்டம் - வெள்ளைக்கோட்டை கிராமம் - திரு.விக்னேஷ் - வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 16.07.2020-இல் காலமானது - அன்னார் மனைவி திருமதி.எம்.உஷா - கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் செய்யப்பட்டது- 24.02.2021 முற்பகல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருவது - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 24.02.2021 மு.ப பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:- 1 ) விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.நக.அ6/10853/2021, நாள். 21.09.2021.

2) அரசாணை (3டி)எண்.137, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி-9(2) பிரிவு, நாள். 14-08-2023.

(((())))

**ஆணை:**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், வெள்ளைக்கோட்டை கிராமம், திரு.விக்னேஷ் என்பவர், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 16.07.2020 அன்று காலமானது, அன்னார் மனைவி திருமதி.எம்.உஷா என்பவருக்கு, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 24.02.2021 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் தனியரின் பணியை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 24.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய அரசின் ஆணை பெற்றுத்தரக் கேட்டு, பார்வை 1-இல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதத்தின் வழி, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு, முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

2) பார்வை 2-இல் காணும் அரசாணையில், தனியர்.

Scanned by CamScanner

திருமதி.எம்.உஷா என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 24.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3) அதன்படி, விருதுநகர் மாவட்ட வருவாய் அலகில், இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.எம்.உஷா என்பவரின் பணியை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 24.02.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

ANITHA D
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது)(பொ)
விருதுநகர்.

பெறுநர்:–
திருமதி.எம்.உஷா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.) அலுவலகம்,
அருப்புக்கோட்டை..
நகல் : தனி வட்டாட்சியர்,(ஆ.தி.ந.)
அருப்புக்கோட்டை. .
நகல் : "அ6" இருப்புக்கோப்பிற்கு

Signed by Anitha D
Date: 16-09-2023 12:35:50

Scanned by CamScanner